**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு, ஜூன் / ஜூலை 2025**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல் மற்றும் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூன் / ஜூலை 2025, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) மற்றும் +1 ARREAR (மார்ச் 2025 பருவத்திற்கு முந்தைய பருவத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர்) துணைத்தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 06.08.2025 ( **புதன்கிழமை) அன்று பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்குச் சென்று Notification-ஐ Click செய்தவுடன் HSE Second Year Exam, JUNE/JULY- 2025 - Scan Copy Download" என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து அதனை 07.08.2025 ( **வியாழக்கிழமை) அன்று முற்பகல் 11.00 மணி முதல்** 08.08.2025 ( **வெள்ளிக்கிழமை) அன்று** மாலை **5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை,

--2--

**செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திலும் ஒப்படைத்து, அதற்குரிய கட்டணத் தொகையினை பணமாகச் செலுத்த வேண்டும்.**

**<u>மறுமதிப்பீடு</u>**

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

**<u>மறுகூட்டல்</u>**

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

**ஓம்/-**

**இயக்குநர்**

நாள் : 05.08.2025

இடம் : **சென்னை** – 600 006.